**எஹெலியகொட பிரதேச சபை - 2022**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எஹெலியகொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஹெலியகொட பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த

போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முத்திரைத் தீர்வை, காசு அடிப்படையில் கணக்கிடுவது கணக்கீட்டுக் கொள்கையாக இருந்த போதிலும், முந்தைய ஆண்டுகலுக்காக கிடைக்கப்பெற்ற முத்திரைத் தீர்வை ரூபா 16,984,123 தொகை அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. | மேலும், காணப்படுகின்ற நிலுவை மீதியை செலுத்தியதன் பின் காசு அடிப்படையில் கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | எதிர் காலத்தில் கணக்கீட்டு கொளகைகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 950,000 பெறுமதியான பெல்லர் இயந்திரம் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | இரண்டு நிலையான வைப்புத்தொகைகளில் வட்டி ரூபா 136,941 கணக்கிடப் பட்டிருக்கவில்லை யென்பதுடன் மற்றொரு வைப்புத் தொகைக்குரிய வட்டி வருமானம் ரூபா 191,062 வால் கணக்கிடப்பட்டது. | அது சரிபார்த்து சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | 06 கணக்கு விடயங்களின் 2022 டிசம்பர் 31இல் நிதிக் கூற்றின் படி மீதிகளுக்கும் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் அன்றைய மீதி தொகைக்கும் இடையே ரூபா 155,357,626 வேறுபாடொன்று இருந்தது. | இனங்காமைகள் பரீட்சிக்கப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கணக்கு விடயங்களின் மொத்தம் ரூபா 1,968,712 தொகைகளை உறுதிபடத்துவதற்கான விரிவான உப பதிவேடுகள் அல்லது பிற மூலாதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாதிருப்பது குற்றமொன்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக. | விரிவான உப பதிவேடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 வைப்பு கணக்குகளில் காணப்படும் மொத்தம் ரூபா 9,337,414 வரவு மீதிகள் இணங்காணப்பட்டு தீர்க்கப்படவில்லை. மேலும், இது தொடர்பான எழுத்துமூலச் தகவல்கள் எதுவும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தீர்த்து வைக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | உரிய மீதிகள் இணங்காணப்பட்டு தீர்வு காண வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) க்கு முரணாக, 1995 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் 43 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூபா 2,001,389 முன்பணங்கள் தீர்க்கப்படவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூபா 1,517,600 ஆன காலாவதியான டெண்டர்கள் மற்றும் பல்வேறு வைப்புத்தொகைகள் நிதிப்பிரமாணம் 571(2) பிரகாரம் தீர்வு காணப்படவில்லை. | தீர்க்கப்படாதுள்ள முன்பணங்களை தீர்த்து வைக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,070,808 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 19,982,959 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 8,561,500 | 10,595,823 | 8,778,931 | 26,327,278 | 8,641,200 | 8,630,285 | 5,263,375 | 24,359,671 |
| வாடகை | 12,107,800 | 11,873,166 | 11,742,288 | 1,282,271 | 11,669,900 | 9,737,897 | 8,391,744 | 2,461,380 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,072,600 | 725,135 | 723,885 | 5,250 | 874,148 | 751,567 | 756,317 | 9,750 |
| ஏனைய வருமானம் | 7,378,300 | 7,233,149 | 6,248,096 | 1,961,071 | 4,658,100 | 4,948,316 | 3,750,347 | 2,009,066 |
| | 29,120,200 | 30,427,273 | 27,493,200 | 29,575,870 | 25,843,348 | 24,068,065 | 18,161,783 | 28,839,867 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 ஆண்டுகளுக்கும் மேலான, பழைய ரூபா 15,181,158 நிலுவையில் உள்ள வீதவரி மீதியொன்று மற்றும் ரூபா 127,459 ஏக்கர் வரி நிலுவை மீதியொன்றும் 2022 டிசம்பர் 31 திகதியில் காணப்பட்டது. | நடமாடும் சேவை வேலைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இரண்டு உத்தியோகத்தரினால் களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலுவை வருமானங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானங்கள் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எஹெலியகொட வாராந்த சந்தையின் 2012 ஆம் ஆண்டுக்கான நிலுவை குத்தகை வாடகையை நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 180,000 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அத்துடன் கடந்த 02 வருடங்களான நிலுவையாக உள்ள கடை வாடகை ரூபா 1,097,523 அறவிடப்படவில்லை. | தற்போது வழக்கை மீண்டும் கோறுவதற்காக தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானங்கள் சேகரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பொதுக் கழிவறைக்குரிய காணி புகையிரத பாதுகாப்புக்காடு ஊடாக விரிவாக்கம் செய்யப்பட்ட மாற்றுப் பாதையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக 2012 ஆம் ஆண்டு மே மாதத்தில் சபையின் செயலாளரினால் அறிவித்திருந்த போதிலும், அதனை அண்மித்த காணியின் உரிமையாளரினால் அந்த காணி தம்மால் அனுபவிக்கப்படுவதாக உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போது, அந்த காணியில் கட்டிடம் ஒன்றை நிர்மானிப்பதற்காக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பம் 2014 மே மாதம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், விண்ணப்பதாரருக்கு அந்த காணிக்கு உள்ள உரிமை தொடர்பான உறுதிப்படுத்தலொன்று 2022 டிசம்பர் வரையிலும் பெறப்பட்டிருக்க வில்லை. | தேடிப்பார்த்து பதிலொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | நடைமுறையிலுள்ள சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். |

### 3.2 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமில்லாத 03 வாகனங்களின் உரிமையை கையேற்பதற்கோ அல்லது மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளதுடன், 02 பழுதடைந்த வாகனங்கள் அகற்றப்படாமலும் இருந்தன. | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அகற்றப்படுவதச்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |